REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1" அணு ★ இலங்கையில் 10' சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.
மலர் 3] சென்னை: ஆடி 24உ செவ்வாய் (9—8—55) ★ ★ வெளியூர்: ஆடி 25உ புதன் (10—8—55) [இதழ் 48

பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி தூதுவராகிறர்!

கராச்சி, ஆக. 8—

பாகிஸ்தானில் புதிய அமைச்சரவை ஏற்பட்டதும், தற்போதுள்ள பிரதமரான முகமது அலி, பாகிஸ்தானின் தூதுவராகப் பாரிசுக்குச் செல்வார் என நம்பகமாகத் தெரியவந்துள்ளதாம்.

இரண்டாவது திட்டத்தில் சென்னையின் பங்கு?

'மக்கள் சபை உறுப்பினர்களையும் கலந்து ஆராயப்படும்'

'திட்டக் குழுவின் 'சிதைக்கும் பணி'யிலிருந்து தப்பபெரும்முயற்சி'

கனம்கள் காமராசர்-பக்தவத்சலம்-சுப்பிரமணியம் டில்லிக்குக் காவடி!

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்காக சென்னை அரசாங்கம் உருவாக்கியுள்ள திட்டத்தைக் குறித்து, திட்டக் குழுவிடம் வலியுறுத்திக் கூற சென்னை அமைச்சர்களான காமராசர்—பக்தவத்சலம்—சுப்பிரமணியம் ஆகிய மூவரும் டெல்லிக்குச் செல்லுகின்றனர்."

"இம்மூவரும் டெல்லி சென்றடைந்ததும், சென்னைப் பிரதிநிதிகளாக உள்ள மக்கள் சபை உறுப்பினர்கள் அனைவர்களையும் சென்னை அரசாங்கத்தின் உத்தேச திட்டங் குறித்து, கலந்து ஆலோசிப்பர் எனத் தெரிகிறது. இக்கூட்டு ஆலோசனைக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. ஏனெனில், அரசியல் கட்சி பாகுபாடின்றி. சென்னை மக்கள் சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலக்கும் முதல் சம்பவமாக, இது இருத்தலாலேயேயாகும்."

11-ந் தேதி பிற்பகலில் சென்னை அமைச்சர்கள் மூவரும் டெல்லி சேருகின்றனர். அன்று மாலையே மக்கள் சபை உறுப்பினர்களைச் சந்திக்கின்றனர். திட்டக் குழுவை 12, 13-ந் தேதிகளில் சந்திக்க முடிவு கட்டியுள்ளனர்.

திட்டம் பற்றி, மக்கள் சபை உறுப்பினர்களை சென்னை அமைச்சர் மூவரும் கலந்து ஆலோசிப்பதற்கும், திட்டக் குழுவிடம் அமைச்சர்கள் கூற இருப்பதற்கும் நெருக்கமான தொடர்பு இருக்காது என எண்ணப்படுகிறது.

முடிவாக ஒரு திட்டத்தை உருவாக்கிவிட்ட பிறகு, அது பற்றி மக்கள் சபை உறுப்பினர்களைக் கலந்து பேசுவதை வெறும் சடங்காகக்கொள்ள முடியுமேயல்லாது, அந்த ஆலோசனைக்கு உண்மையில் இருக்க வேண்டிய மதிப்பு இருக்க முடியாது எனவும் கொள்ளப்படுகிறது.

சில மாநிலங்களில், தங்கள் திட்டங்களை முடிவாக நிச்சயிப்பதற்கு முன்னதாகவே, ஆங்காங்கே உள்ள மக்கள் சபை உறுப்பினர்களைக் கலந்து முடிவுகட்டி இருக்கும் பொழுது, சென்னை அரசாங்கம் மட்டும் தானுகத் தனித்து, முடிவாக நிச்சயித்துவிட்ட திட்டத்தை, திட்டக் குழுவிடம் ஒப்படைக்கும் தருவாயில் சென்னை மாநில மக்கள் சபை உறுப்பினர்களைக் கலக்க முயற்சிப்பது பொருத்தமற்றதாகும் என சில மக்கள் சபை உறுப்பினர்கள் வெளிப்படையாகக் கூறவும் செய்கின்றனர்.

சென்னை அரசாங்கத்தின் திட்டத்தையும், மற்ற மாநில அரசாங்கங்களின் திட்டங்களைச் சிதைத்துள்ளதைப் போன்றே, திட்டக் குழு சிதைத்துவிட முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. திட்டக் குழுவின் 'சிதைப்புப் பணி'க்கு உருவான ஒரு முறை கிடையாது என்ற போதிலும், மற்ற மாநிலங்களுக்கு ஏற்பட்ட சதி, சென்னை திட்டத்திற்கும் ஏற்படுவது நிச்சயம் எனவும் நம்பப்படுகிறது.

8 அல்லது 10 சதவிகிதம் மாநில திட்டங்கள் இதுவரை திட்டக் குழுவால் 'சிதைக்கப்' பட்டுள்ளன; அதே முறை சென்னை திட்டத்திற்கும் சம்பவிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திட்டக் குழுவின் 'சிதைப்புப் பணி'க்கு சென்னை திட்டமும் உள்ளாக்கப்படுமானல், உத்தேச திட்ட செலவிற்கும், செயலாற்றும் திட்டச் செலவிற்கும் கணிசமான வேற்றுமை இருக்கக் கூடும் என்று சொல்லப்படுகிறது.

மற்ற மாநிலங்களை நடத்தினது போன்றே, திட்டக் குழு, சென்னை விஷயத்திலும் நடந்து கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது என சிலர் நம்பவும் செய்கின்றனர்.

சென்னையில், மத்திய அரசாங்கத்தின் முதலீடு மிகமிகக் குறைவாக இருப்பதும், நீர்ப்பாசன, மின்சார ஏற்பாடுகளுக்கு மற்ற மாநிலங்களில் மத்திய அரசாங்கம் அதிகமாக முதலீடு செய்திருப்பதும் சிந்திக்கத்தக்கது.

தமிழ் நாடு, தொழில்துறையில் பின்தங்கிக் கிடப்பதும், பொதுவாக இருந்துவரும் நெருக்கடியான வேலையற்ற நிலையும், மிகமிகக் குறைவாக உள்ள வாழ்க்கைத் தரமும், என்றுமில்லாத வகையில் இன்று மத்திய அரசாங்கத்தால் உணரப்பட்டிருப்பதாகவும், அதனுல் மற்ற மாநிலத்தார் பெற்றதைக்காட்டிலும், நம்பிக்கையளிக்கும் ஏற்பாட்டுடன் சென்னை அமைச்சர்கள், சென்னை திரும்பக் கூடும் எனவும், சென்னை 'மெயில்' இதழின் டில்லி நிருபர், ஆருடம் கூறுகிறர்.

பரிசீலிக்கிறுர் களாம்!

தொழில் நிர்வாகத்திலும் தொழிலாளர்கள் பங்கு பெறுவதற்கென இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்பாடுகள் செய்வதுபற்றி மத்திய சர்க்கார் பரிசீலனை செய்துவருகிறதாம்.

விலகிவிட்டனர்!

கன்னிலம் தாலுகாவைச் சேர்ந்த பெரும்பண்ணையூர், எருமதலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 150 அரிசன மக்கள், கம்யூனிஸ்டு கட்சியை விட்டுவிலகிவிட்டனர் என்று செய்திகள் அறிவிக்கின்றன.

80 மாணவர்களுக்குக் கடும் வயிற்று வலி

உணவுக்கோளாறு காரணம்?

தஞ்சை, ஆக. 8—

திருவையாறிலுள்ள சவமொழி, தமிழ் கல்லூரி மாணவர் விடுதியைச் சேர்ந்த 80 மாணவர்கள் கடுமையான வயிற்று வலியால் அவதியுற்று வாந்தி எடுத்தனராம்; உடனே தஞ்சை மிராசுதார் மருத்துவ மனைக்கு அவர்களனைவரும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளனராம் அவர்கள் உட்கொண்ட உணவில் ஏதோ தவறுகள் நேர்ந்திருக்கலாம் என்றும், அதுவே அவர்களது கடும் வயிற்று வலிக்கான காரணமாக இருக்கக்கூடும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மருத்துவ மனையில் தங்களை அனுமதிக்கக் காலதாமதம் ஆனதாக, மாணவர்கள் புகார் செய்துள்ளனராம். அம்மருத்துவ மனையில், 72 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனராம்.

தொழில் அமைச்சர் இராஜினமா

பாகிஸ்தான் அமைச்சரவையில் கைத்தொழில் இலாகா அமைச்சராக இருந்த எம் ஏ. எச். இஸ்பகானி, தமது அமைச்சர் பதவியை இராஜினமாச் செய்துவிட்டார் என்று தெரிய வருகிறது.

அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படாத எவரும் பதவியில் இருக்கவே கூடாது என்ற கருத்துடனேயே அவர் இராஜினமா செய்துவிட்டாராம்!

துறையூரில் பொதுச்செயலாளருக்கு மாபெரும் வரவேற்பு

ஊர்வலத்தில் தோழர்கள் ஆர்வம்

பொதுக் கூட்டத்தில் கொள்கை விளக்கம்

7—8—55-ல், துறையூர் வட்ட தி. மு. கிளைக் கழகங்களின் சார்பிலும், நகர கழகத்தின் சார்பிலும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு தரப்பட்டது.

அன்று துறையூரில் நடைபெற்ற திருச்சி மாவட்ட கழக குழு கூட்டத்தை நடத்திவைத்துவிட்டு பொதுச்செயலாளர் சரியாக மாலை 5-30 மணிக்கு வந்து சேர்ந்தார்.

குதிரைகள் முன்செல்ல, பாண்டு வாத்தியங்களும், அதிர் வேட்டுகளும் முழங்க நூற்றுக்கணக்கான சைக்கிள்களும், ஆயிரக்கணக்கான கழகக் காளையரும் சூழ, அவர், ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்

செங்காட்டுப்பட்டி, கீரம்பூர், கோட்டாத்தூர், வைரிசெட்டி பாளையம் கொப்பம்பட்டி, ஒக்கரை, வெங்கடேசபுரம், மருவத்தூர், சிங்களாந்தபுரம், தாத்தையங்கார் பேட்டை, மேட்டுப்பாளையம் ஆகிய ஊர் கிளைக் கழகத் தோழர்கள் அங்கங்கிருந்து ஊர்வலமாக புறப்பட்டு துறையூர் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

நகரின் முக்கிய தெருக்களின் வழியாக ஊர்வலம் சென்றபோது, தோழர்கள் பொதுச் செயலாளருக்கு மாலைகள், கைத்தறி ஆடைகள் அணிவித்து, தங்கள் அன்பைக் காட்டினர்.

சரியாக 7 மணிக்கு, மாரியம்மன் கோவில் மைதானத்தில், தோழர் து. ப. அழகமுத்து தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரையின்போது மழை வரவே, சுமார் ஒரு மணி நேரம் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு பின்னர் நடைபெற்றது.

பல கிளைக் கழகங்களின் சார்பில் வரவேற்புப் பத்திரங்களும், கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் பொதுச் செயலாளருக்கு அணிவிக்கப்பட்டது.

பின்னர் பொதுச்செயலாளர் அவர்கள் தி மு கழகத்தின் கொள்கைகளையும், திராவிட நாடு பிரிவினையின் அவசியத்தையும் விளக்கி சுமார் 1½ மணி நேரம் சொற்பொழிவாற்றினர். மழையில் நனைந்துகொண்டே பல்லாயிரக் கணக்கான மக்கள் பொதுச்செயலாளரின் சொற்பொழிவைக் கேட்டனர்.

சென்னை — இரங்கூன் கப்பல் போக்குவரத்து

மீண்டும் ஆரம்பமாகுமென அழகேசன் அறிவிப்பு

புதுடில்லி, ஆக. 8—

"சென்ற ஜூன் திங்களில் நிறுத்தப்பட்ட சென்னை—இரங்கூன் பிரயாணிகள் கப்பல் போக்குவரத்து மீண்டும் இத்திங்கள் இறுதியில் ஆரம்பமாகும்" என்று, இந்திய சர்க்கார் போக்குவரத்து இலாகா உதவி அமைச்சர் ஓ. வி. அழகேசன் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறர்.

தொழிலாளர் மீது போலீசார் கண்ணீர்ப்புகை பிரயோகம்

12 பேருக்குக் காயம்; 30 பேர் கைது

கல்கத்தா துறைமுகத்தில் சம்பவம்

கல்கத்தா, ஆக. 9—

கல்கத்தா துறைமுகத் தொழிலாளர்களிடையே இருந்து வரும் இரண்டு கோஷ்டியினரிடையே நேற்று சுமார் அரைமணி நேரமாகக் கைகலப்பு நடைபெற்றிருக்கிறது.

இதன் விளைவாக 12 தொழிலாளர்கள் காயமடைந்திருக்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கைகலப்பை நிறுத்தச்செய்வதற்காகப் போலீசார், தொழிலாளர்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனராம். 30 தொழிலாளர்களைப் போலீசார் கைது செய்துள்ளனர் எனவும் தெரியவருகிறது.

கல்கத்தா துறைமுகத் தொழிலாளர்களில் ஒருசாரார் போல்ஷ்விக் கட்சியையும், மற்றொருசாரார் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசையும் சார்ந்தவர்களாம்!

50 விவசாயிகள் கைது?

அத்துமீறி நிலத்தில் நுழைந்தனராம்!

தஞ்சை, ஆக. 9—

மன்னார்குடி தாலுகாவிலுள்ள மூவரக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த கொக்குபள்ளி ஏரியிலுள்ள நிலங்களில் அத்துமீறி நுழைந்ததாக தஞ்சை மாவட்ட நிலமில்லாத விவசாயிகள் சங்கத் தலைவரான முருகேசன், திருஞானம் ஆகியவர்களுடன் பன்னிருவர் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

இவர்களைத் தொடர்ந்து மேலும் பல கிளர்ச்சிக்காரர்கள் நுழைந்ததாகவும், இதுவரையிலும் இது சம்பந்தமாக மொத்தம் சுமார் 50 பேர் வரையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஆவல் நிறைவேறுமா?

சென்னை மாநில சர்க்கார், மாநிலத்தில் அச்சுப் பொறிகள் உற்பத்தி செய்வதில் மிகுந்த ஆவல் கொண்டுள்ளதெனவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் அது நிறைவேறி விடும் என்று நாம் நம்புவதாகவும், தொழில் அமைச்சர் பக்தவத்சலம் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறர்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 9—8—'55 செவ்வாய்

கனத்தின் வாதம்!

'அரசியல் சட்டத்தில், மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக மட்டுமேதான் இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதேயல்லது, அதைவிட வேறு ஒன்றுமே கிடையாது'

என்று, கனம் சுப்பிரமணியம் விளக்கம் தருகிறார். அத்துடனும் அவர் நின்றுவிடவில்லை. 'சென்னை அரசாங்கமும் இந்தியை 'வன்மை'யாக எதிர்க்கிறது. இந்திக்கு எதிராக இருப்பதினால் அவ்வாறு எதிர்க்கப்படவில்லை. ஆனால், இந்தி பேசாத மக்களின் நலன்களுக்கு இந்தியால் தீங்கு நேரிடும் என்பதினால்தான் எதிர்க்கப்படுகிறது' எனவும் கனம் சுப்பிரமணியம், சென்னை அரசாங்கத்தின் இந்தி எதிர்ப்புத் தன்மையை விளக்கிக்காட்டி இருக்கிறார்.

கனத்தின் இந்தி எதிர்ப்புக் கூற்றை விளக்கமான ஒன்று எனக் கொள்வதற்கில்லை. 'இந்தியால் இந்தி பேசாத மக்களின் நலன்களுக்குத் தீங்கு நேரிடும்' எனக் கூறியுள்ள அமைச்சரின் பேச்சால், அந்த நலன்கள் எவை எவை—இந்தி நுழைவால் அந்த நலன்கள் எவ்வாறு கேடுறும்—மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக மட்டும் இந்தி கட்டாயமாகவோ அல்லது சாதாரண முறையிலோ நுழையுமானல் இந்தி பேசாத மக்களின் நலன்கள் பாதிக்கப்பட மாட்டாதா—பாதிக்கப்பட மாட்டாது எனக் கூறப்படுமானலும், இந்தி பேசப்படாத மக்களின் நலன்களுக்கு இந்தியால் தீமை நேரிடும் என அமைச்சர் கூறியுள்ளதற்குச் சரியான பொருள்தான் என்ன—என்பன போன்ற ஐயங்கள் எற்படுகின்றன. இந்த ஐயங்களுக்கு அமைச்சரின் அறிவிப்பில் ஒரு துளி சமாதானமும் அறவே கிடையாது.

மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக மட்டுமே இந்தியை அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டிருந்தபோதிலும், இந்தி நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்தி வழங்கப்படாத வட்டாரங்களில் நுழையுமானல், நிச்சயமாக அந்தந்த வட்டாரங்களில் வழங்கிவரும் மொழிகளுக்கு தீமை ஏற்பட்டே தீரும். அவ்விளைவு உடனடியாக உணரப்பட முடியாது; காலப்போக்கில்தான் அந்த உண்மையை ஒவ்வொருவராலும் உணர்ந்துகொள்ள இயலும்.

துவக்கத்தில் மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக மட்டுமே கெஞ்சிக் கூத்தாடி, பிறமொழிப் பகுதிகளில் நுழையும் இந்தி, நாள் செல்லச் செல்ல மற்ற மொழிகளை நலிவடையச் செய்து, இறுதியாகத் தின்று செரிமானித்து விடவும் விடும்.

மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக அரசியல் சட்டத்தில் இந்தி ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால், ஒப்புக்கொள்ளப்பட்ட மாநில மொழிகளை, அவைகளுக்குரிய இடங்களிலிருந்து விரட்டி விட்டு, அவைகளின் இடங்களில் இந்தி ஆதிக்கம் செலுத்தும் நிலைமை ஏற்படுவதும் எதிர்பார்க்கக் கூடியதே! அந்தக் கேடான சூழ்நிலையில் இந்தியை அகற்றுவது என்பது சிந்திக்க முடியாததாகும். அதுவுமன்றி, மாநில ஆட்சி மொழிகள் காப்பாற்றப்படுவது என்ற நிலை அடியோடு கைவிடப்பட்டு, இந்தியே மாநிலங்களின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டே தீரும்.

'இந்தியால், இந்தி பேசாத மக்களின் நலன்கள் பாதகமடையும்' எனக் கூறிடும் கனம், 'கல்லூரிகளின் போதனு மொழியாக வட்டார மொழிதான் உறுதியாக மேற்கொள்ளப்படும்' என உணர்த்திடும் கனம், அதேமூச்சில், 'இந்தியை போதனு மொழியாக ஒப்புக்கொள்ளப்பட்ட தனிக் கல்விக் கூடங்களும் இருக்கக்கூடும்' எனவும் அறிவித்துள்ளார். இந்தப் போக்கு, சென்னை அரசாங்கத்தின் 'வன்மை'யான இந்தி எதிர்ப்புக் கருத்தைக் காட்டுகிறதா, அல்லது, முழந்தாள் படியிட்டு இந்தியை வரவேற்கும் பித்தலாட்டப் போக்கைக் காட்டுகிறதா?

இந்தியாவின் அரசியல் ஒற்றுமையில் நம்பிக்கை இருக்கிறவர்கள், யூனியன் அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்த ஒரு மொழியை நிச்சயித்துக் கொண்டார்கள். அதற்காக, பதினன்கு கோடி மக்களால் பேசப்பட்டு வரும் இந்தியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். இந்தத் தகவலையும் அமைச்சர்தான் சட்டசபையில் அறிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்திற்கும்—மாநில அரசாங்கங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதற்கு இந்தி தேவைப்படுகிறது—சட்டப்படி ஒப்புக்கொள்ளப்பட்டும் இருக்கிறது.

இந்தத் தொடர்பு சிறப்புற இயங்க வேண்டுமானல், மாநில அரசாங்க அலுவலகங்களில் இந்திக்கு முதன்மையான இடத்தைக் கொடுத்தாக வேண்டும். எனவே, மாநில அலுவலகங்களிலும், மத்திய அரசாங்க அலுவலகத்தைப் போன்றே, இந்திக்கு நிகரற்ற ஆதிக்கம் இருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும்.

அந்த நிலையில், இந்தி ஆதிக்கம் பெருகப் பெருக, மாநில ஆட்சி மொழிகள் மெள்ள மெள்ள நலிந்து, முடிவில், இந்திக்கு இடங்கொடுத்துவிட்டு, ஒரேயடியாக மறைந்தொழியும்.

சென்ற காலத்தில் அரசாங்க அலுவலகங்களில் ஆங்கிலம் வளர்ந்த கதையும், தமிழ் சிறுகச் சிறுக செத்தொழிந்த சோக வரலாறும், திரும்பவும் இந்தி நுழைவால் ஏற்படுவது நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

இந்தியாவின் அரசியல் ஒற்றுமையைக் கட்டிக்காக்க, சொந்த மொழியை பலியிட வேண்டியது இன்றியமையாதது போலும்! சென்னை அரசாங்கத்தின் 'வன்மை'யான இந்தி எதிர்ப்பு நாடகத்தில், இந்தப் பயங்கரமான உண்மைதான் புதைந்திருக்கிறது. இதை ஆங்கில மொழி ஆட்சிபீடமேறிய வரலாறு மெய்ப்பித்த வண்ணம் இருக்கிறது.

இந்தியாவிடம் பர்மா கடன் கேட்கும்?

மேற்கு—கிழக்கு நாடுகளிடம் கடனாளியாக விரும்பவில்லையாம்!

இரங்கூன், ஆக. 7—

பர்மாவில் தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்க பர்மா சர்க்கார் வெளிநாடுகளிலிருந்து—குறிப்பாக இந்தியாவிடமிருந்து கடன் கேட்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குள்ளானதாக இருக்கிறதாம்.

பர்மா சர்க்கார், தான் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்பட்ட செலவின் காரணமாகவே, வெளிநாடுகளின் கடன் உதவியைப் பெறவேண்டிய நிலைமைக்கு ஆளாகியுள்ளதாம்.

"யூகோஸ்லாவியா, இந்தியா போன்ற நடுநிலைக் கொள்கைகளைக் கடைபிடிக்கும் நாடுகளிடமிருந்தே பர்மா சர்க்கார் கடன் கேட்க முற்பட்டிருக்கிறதேயன்றி, மேற்கத்திய நாடுகளிடமோ அல்லது மற்ற கிழக்கத்திய நாடுகளிடமோ தன்னைக் கடனாளியாக்கிக் கொள்ள விரும்பவில்லை" என்று பத்திரிகைகள் கூறுகின்றன.

பர்மாவின் முக்கியமான ஏற்றுமதி வருமானத்திற்கு ஆதாரமான அரிசி வாணிபத்தில் ஏற்பட்ட நஷ்டத்தின் விளைவாக வெளிநாட்டு வியாபாரப் பொருட்களின் விலையும் சரிந்துவிட்டதினல் வருமானம் வெகுவாகக் குறைந்துவிட்டதாம்!

பர்மா சர்க்காரின் தீவிரமான அபிவிருத்தித் திட்ட வேலைக்கான செலவுகளுடன், இந்த வியாபார நஷ்டமும் ஏற்பட்டிருப்பதுதான் பர்மாவின் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்கான காரணம் என்று கூறப்பட்டிருக்கிறது.

இலஞ்சப் புழக்கத்தை ஒழிக்க முயற்சி

மத்திய சர்க்கார் நடவடிக்கை!

புதுடில்லி, ஆக. 8—

சர்க்கார் ஊழியர்களில் இலஞ்சப் புழக்கம் இருந்துவருவதை ஒழிப்பதற்காக மத்திய சர்க்காரின் ஒவ்வொரு இலாகாவிலும் ஒரு கண்காணிப்பு அதிகாரி உடனடியாக நியமிக்கப்பட வேண்டுமென சர்க்கார் தீர்மானித்துள்ளதாம்

அந்த அதிகாரி, சர்க்கார் துணை செயலாளரின் நிலைக்குக் குறையாதவராக இருப்பாராம்.

சென்னை — அரக்கோணம் மின்சார இரயில் வசதி?

சென்னை—அரக்கோணம் மின்சார இரயில் வசதி திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மற்ற திட்டங்களுடன் சேர்த்தே கவனிக்கப்படும் என்று மத்திய அரசாங்க இரயில்வே இலாகா குறிப்பிட்டுள்ளதாம்.

பொருட்படுத்தவில்லை?

'நாடற்றவர்கள்' என்று கூறப்படும் இந்திய வம்சா வழியினரை பிரிட்டிஷ் போர்னியோவில் குடியேற்றலாம்—என்று இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை தெரிவித்த யோசனையை டில்லி அதிகார வட்டாரங்கள் பொருட்படுத்தவில்லையாம்!

நில உடைமை நிர்ணயம்

பாசன வசதி பெற்றுள்ள பகுதிகளில் 30 ஏக்கராவும், மலைப்பிரதேசங்களில் 60 ஏக்கராவும் நில உடைமைக்கு வரம்பு நிர்ணயிப்பதென்ற பிரேரேபணை பீகார் அமைச்சரவையின் விசேடக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாம்.

'உரிமைகோரிக்கையை விட்டுக் கொடோம்'

அகாலி தள பொதுச்செயலாளர் அறிவிப்பு

அமிருதசரஸ், ஆக. 8—

"'பஞ்சாப் மொழி வழி மாநிலம் அமைக்கப்பட வேண்டும்,' என்ற கோரிக்கையை வேமறந்த 'உருவத்'திலும் அமைத்து, இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவோம்,"

என்று, சிரோமணி அகாலி தளத்தின் பொதுச்செயலாளரான கியானி கர்தார் சிங் என்பார் அறிவித்திருக்கிறார்.

'பஞ்சாப் சுபா' உருவாக வேண்டுமென்ற தங்கள் கோரிக்கை பற்றி அவர் கூறுகையில், "பெரும்பான்மையான இனத்தவர்களுடன் சரி சமமான—ஒத்த நிலையில் தாங்களும் வாழ வேண்டும்' என்ற தங்களின் உரிமையையே அகாலி தளத்தவர் கேட்கிறார்கள்" என்றும், "அந்த உரிமை, அரசியல் சட்டப்படி தங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ள ஒன்று" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பொற்கோயிலுக்கு வெளியே குருத்துவாரா மஞ்சி சாகிபில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் அவர், பஞ்சாப் மொழி வழி மாநில கோரிக்கைக்கு சீக்கியர்களின் முழு ஆதரவும் கிடைத்துள்ளதாகவும், இதனை நிரூபிக்க, அண்மையில் அகாலி தளத்தவர் நடத்திய போராட்டத்தில் பெற்ற 'வெற்றி'யே போதுமானது என்றும், அது தவிர, அண்மையில் சிரோமணி குருத்துவாரா பிரபந்தக் குழுவிற்கு நடைபெற்ற பொதுத் தோதலும் இந்த உண்மையைப் புலப்படுத்தும் என்றும் கூறியிருக்கிறார்.

"அண்மையில் அகாலி தளத்தவர் நடத்திய கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்ட அகாலிதளத் தொண்டர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படாதிருக்கும் வரையில், சீக்கியர்களின் கஷ்டங்கள் குறித்து சர்க்காருக்கும் — தளத்திற்கும் இடையே எந்தவிதமான உடன்பாடுகளும் ஏற்பட சாத்தியமில்லை; மேலும், அகாலிதளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் கையொப்பமிடாத எந்த உடன்படிக்கையும் பிரயோசனமற்றதாகவே இருக்கும்" என்றும் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"'சீக்கியர்களின் குறைகள்' என்று கூறப்படும்போது, 'பஞ்சாப் மொழிவழி மாநிலம் அமைக்கப்படவேண்டும்' என்று அவர்கள் கோருவதும் ஒன்றுகும்" என்றும் கூறினர்.

பதிவு செய்யப்பட்டவர்கள் பற்றி பரிசீலனையாம்!

கோத்தலாவலை கொண்டு வரும் புதிய சட்டம்

குடிமக்கள் பதிவு இலாகாவில் ஊழல்கள் இருப்பதாகவும், சட்ட விரோதமாகக் குடியேறியவர்களையும் இலங்கைக் குடிமக்களாகப் பதிவு செய்திருப்பதாகவும், இலங்கைப் பிரதிநிதிகள் சபையில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கூறியவற்றிற்குப் பதில் செல்லுகையில், இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, 'ஏற்கனவே இலங்கைக் குடிமக்களாகப் பதிவு செய்யப்பட்டவர்களைப் பற்றி மீண்டும் பரிசீலனை நடத்துவதற்குப் புதிய சட்டம் கொண்டு வரப்படும்," என்றார்.

மேலும் அவர் சொன்னர்:—

"குடியுரிமை கோரி தாக்கல் செய்யப்பட்ட 2,30,000 மனுக்களில், 1,65,000 மனுக்கள் சம்பந்தமாக விவாதம் நடைபெற்றுவிட்டது; ஓராண்டிற்குள் குடியுரிமைப் பதிவு பூர்த்தியாகிவிடும்"

1954-ம் ஆண்டில், கிராமங்களில் மொத்தம் 32 தாய்-சேய் நல விடுதிகள் திறந்துவைக்கப்பட்டன.

'உலக ரிகார்டை' மிஞ்சும் உண்ணுவிரதம்!

100 நாட்கள் இருக்க 'பக்கிரியின்' விருப்பம்

ரியோடிஜெனிரோ, ஆக. 7—

பிரேசிலைச் சேர்ந்த சில்கி எனும் பெயருடைய சாமியார் ஒருவர், 99 நாட்கள் 6 மணி நேரமாக உண்ணுவிரதம் இருந்து 'உலக ரிக்கார்டை'யும் மிஞ்சியுள்ளார் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த சாமியாருக்கு வயது 36 என்றும், தன்னுடன் உண்ணுவிரதமிருக்க மற்றொரு சாமியார் சவால் விட்டதை ஏற்றுக்கொண்டதற்கிணங்கவே அவர் உண்ணுவிரதத்தை ஆரம்பித்தார் என்றும், ஆனல் சவாலுக்கு அழைத்த மற்ற சாமியாரோ, உண்ணுவிரதத்தைத் துவங்கிய 20-வது நாளில் தமது உண்ணுவிரதத்தைக் கைவிட்டுவிட்டாரென்றும், பிரேசில் சாமியார் மட்டும் தம்முடைய உண்ணுவிரதத்தைக் கைவிடாமல் 99 நாட்கள் 6 மணி நேரம் ஆரஞ்சுப்பழ ரசத்தை மட்டும் அருந்திக்கொண்டு உண்ணுவிரதம் இருந்துவருவதாகவும், தொடர்ந்து உண்ணுவிரதம் இருந்து 100 நாட்களைக் கழிக்க அவர் விரும்புவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கண்ணடியால் செய்யப்பட்ட கூண்டு ஒன்றில், ஆணிகளை அடித்து, அந்த ஆணிகளின் மேல் படுத்துக்கொள்வாராம் அந்தச் சாமியார்! மேலும் கூண்டைச் சுற்றிலும் பாம்புகளும் கிடக்கின்றனவாம்.

அந்தச் சாமியாருக்குப் பரிசாக பிரேசில் வாழ் மக்கள் 14,000 டாலர் அளிக்க இருக்கின்றனராம்.

ரூ. 60 லட்சம் செலவில்...

சென்னையில் தொழில் எஸ்டேட்

சென்னை — கோடம்பாக்கத்தில், ஒரு தொழில் எஸ்டேட் நிறுவ வேண்டுமென சென்னை சர்க்கார் உத்தேசித்திருப்பதையொட்டி, சென்னை கோடம்பாக்கத்திலுள்ள தொழில் இலாகா டைரெக்டர் காரியாலயத்தில் சிறு ரகக் கைத்தொழில் அதிபர்களடங்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றிருக்கிறது.

கோடம்பாக்கம் புகைவண்டி நிலையத்திற்கு அருகாமையில் 20 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறதாகவும், இத்தொழில் எஸ்டேட் திட்டம் மொத்தம் ரூ. 60 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

தொழிலாளர் குடியிருப்பு வசதிக்கு ஆவன செய்க'

'மத்திய ஆட்சியிடமிருந்து ரூ. 2 கோடி பெறுக!'

சென்னை சர்க்காருக்கு மக்கள் சபை உறுப்பினர் கோரிக்கை

சென்னை, ஆக. 7—

"தொழிலாளர்களுக்கென வீடுகள் கட்டித் தருவதற்காக மத்திய சர்க்கார் ஒதுக்கியுள்ள நிதியிலிருந்து குறைந்த அளவு ரூ 2 கோடியாவது வாங்கி, மாநிலத்திலுள்ள தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கான வழிவகைகளைக் காண வேண்டும்," என்று ஆர். வெங்கடராமன் எம்.பி, சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான உணவுத் தானியங்களுக்காக இந்தியருக்குச் சொந்தமான கப்பல்களுக்கும், வெளிநாட்டுக் கப்பல்களுக்கும், 1953—54-ம் ஆண்டில் முறையே ரூ. 58 லட்சமும், ரூ. 750 லட்சமும் கப்பல் கட்டணமாகச் செலுத்தப்பட்டன; 1954—55-ம் ஆண்டில் முறையே ரூ. 144 லட்சமும், ரூ. 259 லட்சமும் செலுத்தப்பட்டுள்ளன.

'கனவு நனவாகும் காலம் நெருங்குகிறது'

சோவியத் விஞ்ஞானிகள் கருத்து

"சந்திர மண்டலத்திற்குப் பறந்துசெல்ல வேண்டு மென்ற மனிதனின் கனவு என்றாவது ஒருநாள் நனவாகத்தான் போகிறது; அந்த நாளும் வெகு தூரத்தில் இல்லை."

என்று சோவியத் விஞ்ஞானிகள் கருதுவதாக மாஸ்கோ நிலயம் அறிவித்திருக்கிறதாம்.

சோவியத் யூனியன் தயாரிக்கும் 'செயற்கை உலகங்கள்' அமெரிக்கா தயாரிக்கும் 'செயற்கை உலகங்'களைவிட அளவில் மாறுபட்டதாக இருக்குமென்றும் அவர்கள் கூறியுள்ளனராம்.

★

செயற்கை சந்திரன் ஒளி வீசும்!

அடுத்த மாதத்தில், நியூ மெக்ஸிகோ மீது செயற்கை நிலவொளி பிரகாசிக்கும் என்று அறிவிக்கப் படுகிறது.

இதற்கு ஒரு புதுவிதமான முறையைக் கையாள இருக்கின்றனர். சில ராத்தல் 'சோடியம்' என்ற ரசாயனத்தைக் கொண்ட ராக்கெட் ஒன்று பூமிக்கு மேலே ஒரு குறிப்பிட்ட உயரத்தில் அனுப்பப்படும்; இந்த 'சோடியம்'னது வெடி மருந்தின் உதவியினல் ஆவி ரூபமாகி, ஒளியைத் தருமாம்.

பூமிக்கு மேல் 60 மைல் உயரத்தில் இயற்கையாகவே சோடியத்தின் 'மெல்லிய ஒளி' படர்ந்திருப்பதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்; இதை நிர்ணயிக்கும் முறையில் இம்முயற்சி இருப்பதாகக் கூறப்படுகிறது.

★

நிலவொளியை வீசும் ராக்கெட்டுகள்!

நிலவொளியை வீசச் செய்யும் ராக்கெட்டுகளை பூமிக்கு மேல் ஆகாய மண்டலத்தில் அனுப்ப பிரிட்டிஷ் விஞ்ஞானிகளும் திட்டமிட்டிருக்கின்றனர்.

கலிபோர்னியாவில் உள்ள ஆராய்ச்சிக்கூடத்தில் சுமார் 6 மாதங்கள் பணியாற்றிய பிரிட்டனின் பிரபல விஞ்ஞானி பேராசிரியர் டி. ஆர். பேட்ஸ் இத்திட்டத்தின் விவரத்தை குறிப்பிட்டார்:—

"பூமிக்கு மேலே 60 மைல் உயரத்திற்கு இந்த ராக்கெட்டுகள் அனுப்பப்படும்; அங்கிருந்து இவை சோடியம் புகையைக் கிளப்பும்; இந்தப் புகை, மஞ்சள் நிற ஒளியை உருவாக்கும்; இது, பூரண சந்திரனின் ஒளியைப் போல இருக்கும்; இந்தப் புகை பல நகரங்களின் வீதியில்கூட தற்போது வெளிச்சத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகாய மண்டலத்தில் உள்ள சோடியம், ஒளியை உண்டாக்குகிறது; இதை அதிகப்படுத்துவதின் மூலம் பூரண சந்திரனின் ஒளியைப் போன்ற வெளிச்சத்தை உண்டாக்கலாம்."

★

செயற்கை கிரகங்கள் அனுப்பப்படும்!

ஆகாய மண்டலத்தில் அனுப்பப்பட இருக்கும் செயற்கை கிரகங்களைப் பற்றியும் ராயல் வான சாஸ்திர கழகம் குறிப்பிடுகையில் கூறுவதாவது:—

"அடுத்த இரண்டாண்டுகளில் செயற்கைக் கிரகங்கள், பூமிக்கு மேலே 120 மைல் உயரத்திற்கு அனுப்பப்படும்; இவைகளில் 100 ராத்தல் எடையுள்ள விஞ்ஞானக் கருவிகள் அனுப்பப்படும்"

இந்திய—அமெரிக்க தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஏற்பாட்டின் கீழ் இதுவரை இறக்குமதி செய்துள்ள இரசாயன உரங்களின் மொத்த அளவு, 1955 ஜூன் 30-ந் தேதி வரை மொத்தம் 2,39,400 டன்னும்!

கைத்தறித் தொழில் அபிவிருத்தி

ரூ. 1.29 கோடி நிதி உதவி

புதுடில்லி, ஆக. 7—

கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்காக, இந்திய சர்க்கார், 11 மாநிலங்களுக்கு மேலும் ரூ. 1,29,08 600 தொகையை கடனாகவும், மானியமாகவும் வழங்கியுள்ளனராம்.

சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில், இதற்குக் கடனாக ரூ. 63,94,000-மும், மானியமாக ரூ. 26,10,500-ம் மற்றும் ரூ. 66,200-ம் வழங்கப்பட்டிருக்கிறதாம்.

திரு—கொச்சி மாநிலத்திற்குக் கடனாக ரூ 5,03, 475மும், மானிய உதவியாக ரூ. 2,25,000மும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்த நிதி ஆண்டில் கைத்தறித் துணியின் பிரச்சாரத்திற்காக மொத்தம் ரூ 2,95,000 வரையிலும் செலவு செய்ய இந்திய கைத்தறிக் குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதெனவும் தெரியவருகிறது.

கைத் தொழில்களை ஆராய் வார்தாவில் கழகமாம்!

ரூ.75,000 இந்திய சர்க்கார் உதவி

வார்தா, ஆக. 7—

கிராமக் கைத் தொழில்களில் உபயோகிக்கப்படும் கருவிகள், தொழில் முறைகள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகள் நடத்த வார்தாவில், வெகு விரைவில் ஒரு நவீன தொழில் நுட்பக் கழகம் ஏற்படுத்தப்பட இருக்கிறதாம்.

அந்தத் தொழில் நுட்பக் கழகத்திற்கான கட்டிடம் கட்ட இந்திய சர்க்கார் ரூ. 75,000 வழங்கியுள்ளனராம்!

மக்களின் இதயம் கவர்ந்த கொள்ளைக்காரன்!

பம்பாய், ஆக. 5—

பிரபல கொள்ளைக்காரனும், 16 ஆண்டுகளாக போலீசாரால் தேடப்பட்டு வருபவருமான மான்சிங்குக்கு பொதுமக்களிடம் இருக்கும் செல்வாக்கை பற்றி இராஜஸ்தானில் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலாக இருந்த கே. டி. பில்லிமோரியா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

"கொள்ளைக்கார மான்சிங்கைப் பிடிப்பது மிகக் கடினமாக இருக்கிறது; இதற்குக் காரணம், அவனுக்கு பொதுமக்களிடம் மிகுந்த செல்வாக்கு இருப்பதேயாகும். ஏழைகளுக்கு அவன் பணமும், உணவும் தருகிறான்; அதனால், அவர்கள், அவனை காட்டிக் கொடுக்க மறுக்கின்றனர்;

"மான்சிங்குக்கு 68 வயதாகியும் கூட, ஒரே இரவில் கால்நடையாகவே 30 மைல் பிரயாணம் செய்யக்கூடிய ஆற்றலுள்ளவனாயுள்ளான்; இவனைக் கண்டதும் போலீசாரும் கூட தங்களது ஆயுதங்களைக் கீழே போட்டுவிடுகின்றனர்; பெண்கள் மாலை சூட்டி வரவேற்கின்றனர்; சிறு குழந்தைகள்கூட, சிறிதுகூட அஞ்சாமல், அவனது மடிமீதேறி அமர்ந்து விளையாடுகின்றன."

கிராமங்களில், மான்சிங்குக்கு நடைபெறும் மரியாதையை குறிப்பிட ஒரு சம்பவத்தை இவர் தெரிவித்தார்.

"ஒருமுறை, போலீசார், மாறுவேடமணிந்து ஒரு கிராமத்திற்குச் சென்றனர்; இவர்களை, கிராம மக்கள், கொள்ளையர் என்று எண்ணி மிகுந்த அன்போடு உபசரித்தனர்; ஆனால், போலீசார் என்றுதெரிந்ததுடன் விரட்டிவிட்டனர்."

'ஆங்கில மொழி அகற்றப்படக்கூடாது'

'இந்தி மொழி இன்னும் வளர்ச்சி பெறவில்லை'

பண்டித குன்ஸ்ரு கருத்து

இந்தூர், ஆக. 4—

"ஆங்கிலம், இடைநிலைக் கல்வி நிலையில் கட்டாய பாடமாக இருக்க வேண்டும்."

என்று, மாநில புனரமைப்புக்குழு உறுப்பினரான பண்டித எச். என். குன்ஸ்ரு குறிப்பிட்டிருக்கிறார்.

'முதலியார் குழு' அறிவித்திருக்கிறபடி ஆங்கிலம் ஒரு இஷ்டபாடமாக அமையவேண்டுமென்பதை, தான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"நாம் சுதந்திரமற்றிருந்தபோது, ஆங்கிலம் கற்றுக்கொள்ளுமாறு செய்யப்பட்டோம்; ஏன் நாம் சுதந்திரம் பெற்றுவிட்ட பின்னும் அந்த மொழியினைத் தொடர்ந்து கற்றுக்கொள்ளக் கூடாது? அகில உலக விஷயங்களை ஆங்கிலம் ஒன்றினுல் தான் நாம் நன்கு புரிந்து கொள்ளமுடியும்;

"இந்தியாவில் சில மாநிலங்களில் ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாகவும், சில மாநிலங்களில் இஷ்டப்பாடமாகவும் வைத்திருக்கின்றனர்; எல்லா இடங்களிலும், ஆங்கில மொழி அறிவின் தரம் குன்றிவருகிறது; இந்தியாவைவிட பெரிய நாடுகள் எல்லாம் இரண்டு அன்னிய மொழிகளை தங்கள் மாணவர்களுக்குக் கட்டாயப்பாடமாக வைத்திருக்கின்றன. ரஷ்யாவில் இரண்டு அன்னிய மொழிகள் கட்டாயப் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது; அவற்றில், அவர்கள் ஆங்கிலத்திற்கு முதலிடம் தந்திருக்கின்றனர்.

"நிலைமை உலகில் இப்படி இருக்கும்போது, இந்தி மொழி இன்னும் அபிவிருத்தியடையாத நிலையிலிருக்கும்போது, இந்தியா ஏன், ஆங்கில மொழியை வெறுக்கவேண்டும்?

"தாய்மொழி, வட்டார மொழி இவற்றுடன் ஆங்கில மொழியும் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும்."

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மனக் கோளாறுக்கு மருத்துவ வசதி

"கடந்த இரு ஆண்டுகளாக சென்னை பொது மருத்துவ மனையில் சித்த சுவாதீனமின்மைக்கு ஆரம்ப சிகிச்சை பெற்றுச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வந்துள்ளது; இப்போது, மருத்துவ மனையிலேயே தங்கி சிகிச்சை பெறுவதற்காக ஆறு படுக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; இராயபுரம் ஸ்டான்லி மருத்துவ மனையில் ஆரம்ப சிகிச்சை பெற்றுச் செல்வதற்கும் இப்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன," என்று சுகாதார இலாகா அறிவித்துள்ளது.

கோவா எல்லையில் இந்திய 'டாங்கி'கள்

லிஸ்பன், ஆக. 7—

கோவாவின் வடக்கு எல்லையில் 15 இந்திய 'டாங்கி'கள் குவிக்கப்பட்டுள்ளன என்றும், அந்தப் பகுதியில் இருந்த இந்தியக் கொடி ஒன்றை அப்புறப்படுத்த முயன்ற போர்ச்சுகீசியப் போலீசார் ஒருவர் வெடி வெடித்துக் காயம்பட்டுள்ளார் எனவும் கோவா போர்ச்சுகீசிய சர்க்கார் அறிவித்திருக்கின்றனராம்.

மீன் பிடிப்பதற்கு உபயோகிக்கப்படும் படகுகளில் இயந்திர சாதனங்களை அமைப்பதற்காக, சுவீடனிலிருந்து, சுமார் ரூ. 5 இலட்சம் செலவில் 49 டீசல் உச்ச இயந்திரங்களை இந்தியா வாங்கியிருக்கிறது.

நடு நிலைமைக் குழுவுக்குத் தென் கொரியா எதிர்ப்பு

ஏற்படும் விளைவுகளுக்கு சர்க்கார் பொறுப்பல்லவாம்!

சியோல், ஆக. 7—

"வருகிற சனிக்கிழமைக்குள்ளாக, தென்கொரியாவிலுள்ள 'சர்வதேச நடுநிலைமைக் குழு' திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட வேண்டும்."

என, நடுநிலைக் குழுவின் பான்முன் ஜாம் தலைமைக் காரியாலயத்திற்கு தென்கொரிய அரசாங்கம் குறிப்பொன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது.

"ஆகஸ்டு 13-ந் தேதிக்குள் அந்தக் குழு திரும்பப் பெற்றுக் கொள்ளப்படாவிட்டால் அக்குழுவின் பிரதிநிதிகளுக்கு ஏற்படவிருக்கின்ற விளைவுகள் அனைத்துக்கும் தென்கொரிய சர்க்கார் பொறுப்பாக மாட்டாது," என்றும் அவ்வறிக்கையில் காணப்பட்டிருக்கிறது.

இத்தகவல் பொதுமக்களுக்குத் தெரிய வந்ததும் தென்கொரியா முழுமையிலும் பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன என்றும், பல இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்க இராணுவ போலீசாருடன் கைகலப்பில் ஈடுபட்டனர் என்றும் செய்திகள் அறிவிக்கின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களின் விளைவாக முன்னுள் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த 6 பேர் துப்பாக்கி காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனராம்.

'நடு நிலைமைக் குழு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்,' என்ற ஒலி முழக்கத்துடன், சியோலில் சுமார் 10,000 பேர் ஆர்ப்பாட்டம் செய்தனராம்.

உயர் நீதிமன்ற செஷன்ஸ் வழக்குகள்

தனி நீதிபதியிடம் ஒப்படைக்க மசோதா வருமென அறிவிப்பு

சென்னை உயர் நீதிமன்றத்தின் வசமுள்ள செஷன்ஸ் வழக்குகளை அகற்றவும், மாவட்ட நீதிபதி அந்தஸ்துள்ள ஒரு நீதிபதியின் விசாரணைக்கு அவைகளை மாற்றவும் மசோதா ஒன்று கொண்டுவரப்படுமென சென்னை மேல் (சட்ட) சபையில் மந்திரி சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

உயர் நீதி மன்றத்தில், பைசலாக வேண்டிய சிவில், கிரிமினல் வழக்குகளின் புள்ளி விவரங்களையும் அவர் குறிப்பிட்டார்:—

"1945 முதல் 1955 வரை, 2,280 அப்பீல்களும், ஒரிஜினல் தீர்ப்புகளுக்கு எதிராக 278 அப்பீல்களும், 'சிடி சிவில் கோர்ட்' தீர்ப்பு மீது 377 அப்பீல்களும், 211 'பிரத்தியேக ரக' அப்பீல்களும், 3,848 இரண்டாம் அப்பீல்களும், 1,572 சிவில் மறுவிசாரணை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது; அவைகளை விசாரித்துத் தீர்ப்பு கூறவேண்டியிருப்பதால் கால தாமதமாகிறது."

அகில இந்திய நூல் நிலையம்

தென் பகுதியிலும் ஒன்று நிறுவப்படுமாம்!

கல்கத்தா, ஆக. 6—

'அகில இந்திய நூல் நிலைய சர்வீஸ்' ஒன்றை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்படுத்துவதென மத்திய சர்க்கார் உத்தேசித்துள்ளனர் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி, தெற்குப் பகுதியில் ஒரு தேசிய நூல் நிலையமும், மேற்குப் பகுதியில் ஒரு தேசிய நூல் நிலையமும் ஏற்படுத்தப்படுமாம்!

இந்தியாவிற்கு 2,000 இரயில்வே வாகனங்கள்

ஆஸ்திரேலியா அனுப்புகிறது

கொழும்புத் திட்டத்தின் கீழ் இந்தியாவிற்கு ஆஸ்திரேலியா 2,000 இரயில்வே வாகனங்களை விநியோகம் செய்யும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நடுநிலைக் கல்வி அபிவிருத்தி அடைந்திருக்கிறதா?

அகில இந்தியக் குழு ஆராயுமாம்!

புதுடில்லி, ஆக. 6—

நாடு முழுமையிலும் நடுநிலைக் கல்வி நிலை எவ்வளவு தூரத்திற்கு அபிவிருத்தி கண்டுள்ளது என்பது குறித்து ஆராய 'அகில இந்தியக் குழு' ஒன்று நியமிக்கப்பட இருக்கிறதாம்!

ஜமீன் ஒழிப்பு: சர்க்கார் அறிக்கை

சென்னை, ஆக. 8—

சென்னை மாநிலத்தில் மொத்தம் 4,738: எஸ்டேட்டுகள் இருந்தன; அவற்றுள் 4,659 எஸ்டேட்டுகளை கடந்த ஜூலைத் திங்கள் 15-ந் தேதி வரை சர்க்கார் தமது சொந்த நிர்வாகத்தின் கீழ் மேற்கொண்டுள்ளனர்; பாக்கியுள்ள 79 எஸ்டேட்டுகளில் ஒன்று ஜமீன் எஸ்டேட்; குத்தகை எஸ்டேட்டுகள் 8; மற்ற 70 எஸ்டேட்டுகளும் இனும் எஸ்டேட்டுகள்.

சர்க்கார் நேரடி நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளுக்கு ஜூலை திங்களில் கொடுக்கப்பட்டநஷ்டயீட்டிற்கான முன்பணம் ரூ.1,16,240—11—5; இடைக்கால பட்டுவாடாப் பணம் ரூ. 56,596—10—6.

எஸ்டேட்டுகள் மொத்த பரப்பளவு 10,000 சதுர மைல்கள். இவ்வாண்டு மே திங்கள் முடிய, அப்பரப்பளவில் சுமார் 6,760 சதுர மைல்கள் சர்வே செய்யப்பட்டுள்ளது. 2,982 சதுர மைல் அளவுக்கு 'செட்டில்மெண்ட்' வேலைகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன.

இந்தத் தகவல்கள் அனைத்தும் சென்னை சர்க்கார் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளது.

கிராம ஊழியத்திற்கு மருத்துவர்கள்

விதிமுறைகள் மாற்றி அமைக்கப்படும்?

சென்னை, ஆக. 7—

சர்க்கார் ஊழியத்தில் உள்ள மருத்துவர்கள் அனைவரும் குறைந்தது 2 ஆண்டு காலத்திற்காவது கிராமங்களில் பணியாற்றும் வகையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விதிமுறைகள் அமைக்கப்படலாம் என்று அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை மேல் சபையில் தெரிவித்திருக்கிறார்.

மேலும், மருத்துவப் பணியினை மாநில சர்வீசாக மாற்றியமைத்து, மருத்துவர்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஜெயபிரகாசுக்கு அழைப்பு

புதுடில்லி, ஆக. 7—

நாட்டின் எதிர்கால நன்மையை உத்தேசித்து மக்கள் சோஷலிஸ்ட் கட்சியின் தலைமைப் பதவியை மீண்டும் ஏற்றுக்கொண்டு கட்சியின் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்று ஜெயப்பிரகாஷ் நாராயணனைக் கேட்டுக் கொள்வதாக டில்லியில் நடைபெற்ற டில்லி மாநில ம. சோ. கட்சி மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாம்.

'போர்ப்பாதை' மறைகிறது!

'சமாதான பாதை'யில் மனிதனின் சிந்தனை திரும்புகிறது

நாகரிகம் அழியும் நிலையை மாற்ற 'பொற்கால அணுயுகம்' பிறக்கும்?

1,500 விஞ்ஞானிகள் கூடியுள்ள அணுசக்தி மாநாடு சாதிக்கப் போகும் திட்டங்கள்?

" இன்னும் 40 ஆண்டுகளில், அணு, நீர்வளிக் குண்டுகள் தயாரிப்புமுறையில் வெளிப்படும் பிரும்மாண்டமான சக்தியைக் கொண்டு உலகிற்குத் தேவையான எரி பொருள், மின்சார சக்தி யாவும் ஒன்று திரட்டப்பட்டு, உலகில் நிரந்தரமாகத் தீர்க்கப் பட்டு ஒரு பொற்கால 'அணு யுகம்' ஆரம்பமாகும்;

" நமது எரி பொருள் வளங்கள் (நிலக்கரி, எண்ணெய், 'காஸ்' முதலியன) முழுமையும் எரித்துத் தீர்த்துவிட்டால் நாகரிகம் அழிந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டுவிடும்; அடுத்த 100 ஆண்டுகளில் உலக மக்கள் தொகை இருமடங்காகப் பெருகினுல் இப்போதுள்ள எரி பொருட்கள் யாவும் 100 ஆண்டுகளுக்குள் தீர்ந்துபோய்விடும்; ஆகவே, எரி பொருட்களுக்கு ஒரு புதிய சக்தியைக் கண்டுபிடிக்க வேண்டியது மிக்க அவசியமாகும்; அணு சக்திமூலம் இதற்குப் பரிகாரம் தேடலாம்; உலகம் முழுவதிலும் யுரேனியம், தோரியம் (அணு சக்தி மூலப் பொருட்கள்) மூலம் இப்பிரச்சினைக்குப் பரிகாரம் தேடலாம்,"

—என்று, அணு சக்தியை ஆக்கத் துறையில் திருப்பி பயன்படச் செய்வது பற்றி ஆராய, ரஷ்யா உட்பட 73 நாடுகளிலிருந்து 1,200 விஞ்ஞானிகள் திரண்டுள்ள ஜினீவாவில் நடைபெறும் சர்வதேச அணு சக்தி மாநாட்டில் தலைமை உரை ஆற்றுகையில் இந்திய சர்க்காரின் அணு சக்தி குழுவின் தலைவர் டாக்டர் எச். ஜே. பாபா குறிப்பிட்டார்.

" யுத்தத்தின் பாதையிலிருந்து, சமாதான வழிக்கு மனிதனின் சிந்தனையை இம்மாநாடு தூண்டிவிடும்," என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

" இம்மாநாடு, அரசியல் தன்மையற்றது என்றாலும், அரசியல் முக்கியத்துவம் கொண்டது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

போர்ச்சுகல்தூதுவராலயம் மூடப்பட்டது

பிரேசில் தூதுவராலயத்திற்கு லிஸ்பன் வேண்டுகோள்

புதுடில்லி, ஆக 9—

புதுடில்லியிலுள்ள போர்ச்சுகீசியத் தூதுவராலயம் மூடப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி, புதுடில்லியிலுள்ள போர்ச்சுகீசியத் தூதுவராலய பிரதான அதிகாரியும், மற்ற 4 லிஸ்பன் அதிகாரிகளும் போர்ச்சுகல் திரும்பிவிட்டனராம். நாடு திரும்பவேண்டிய தூதுவராலய அதிகாரிகளுள் இன்னும் ஒருவர்தான் தற்போது புதுடில்லியில் இருப்பதாகத் தெரிகிறது.

போர்ச்சுகல் தூதுவராலயம் மூடப்பட்டுவிட்டதால், இந்தியாவிலுள்ள போர்ச்சுகீசியரின் நலன்களைப் பார்த்துக்கொள்ளும்படி இந்தியாவிலுள்ள பிரேசில் தூதுவராலயத்தை லிஸ்பன் கேட்டுக்கொண்டுள்ளதாம்.

" இந்தியா தற்போதைய சூழ்நிலையைப் பொறுத்தவரையில் லிஸ்பன் தூதுவராலயம் இருப்பதில் பயன் ஒன்றும் இல்லை என்று கூறி போர்ச்சுகல் தூதுவராலயத்தை மூடிவிடும்படி அண்மையில் இந்திய சர்க்கார் உத்தரவிட்டிருந்தது நினைவிருக்கலாம்.

★

ஆகஸ்டு 15-ல்!

இந்தியாவின் சுதந்திர தினமாகிய இத்திங்கள் 15-ந் தேதியன்று இந்தியா முழுமையிலுமிருந்து சுமார் 5000 கிளர்ச்சிக்காரர்களுக்குமேல் கோவா விற்குள் நுழைவர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1955-ம் ஆண்டின் முதல் மூன்று மாத காலத்தில், மொத்தம் 21,519 தையல் இயந்திரங்கள் உற்பத்தியாயின. அதற்கு முந்திய கால் வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட தையல் இயந்திரங்களின் எண்ணிக்கை 19,152 ஆகும்.

சர்க்கார் தொழிற் கொள்கை எதிரொலி?

பெங்களூர், ஆக. 8—

" சேரிகள் நகரசபையால் ஏற்படுத்தப்பட்டவையல்ல; சர்க்காரின் தொழிற்கொள்கையே இதற்குக் காரணம்; ஆகவே, சேரிகளினுல் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சர்க்காரும் உதவவேண்டும்,"

என்று, சென்னை மேயர் எம். ஏ. சிதம்பரம், பெங்களூர் நகரசபை மேயர் அளித்த தேநீர் விருந்தில் பேசுகையில் குறிப்பிட்டு, மேலும் சொன்னார்:—

" நாளுக்கு நாள், 'நடைபாதைவாசி'கள் அதிகரித்துக் கொண்டே போகும் பிரச்சினைகளைப் பற்றி, நகரசபை நிர்வாகிகளை எச்சரிக்க விரும்புகிறேன்; தக்கமுறையில், இப்பிரச்சினைபற்றி கவனிக்காவிட்டால், சேரி வாழ்வோர் பிரச்சினையை விட, இது, பெரிய அளவில் மாறிவிடக்கூடும்."

விமான விபத்தில் 10 மகளிர் பலி

நஷ்ட ஈடு தருவதற்கு ரஷ்யா முன்வருகிறது

ஆஸ்லோ, ஆக. 9—

நார்வேயிலிருந்து புறப்பட்ட விமானம் ... திராடிற்கும் இடையே, சென்ற சனிக்கிழமையன்று, சோவியத் விமானம் ஒன்று விழுந்து நொறுங்குண்டது என்று தெரியவருகிறது.

நார்வே தூதுக் குழுவின் 10 பெண்கள் உட்பட 25 பேர் அவ் விபத்தில் கொல்லப்பட்டனர் என்றும் தெரிகிறது.

விபத்துக்குள்ளான பிரயாணிகளுக்கு—குறிப்பாக நார்வே தூதுக் குழுவினருக்கு சோவியத் சர்க்கார் மிகுந்த வருத்தம் தெரிவித்ததுடன், உயிர் துறந்த அப் பெண்மணிகளின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு தருவதற்கு முன் வந்துள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

மானியம் ரூ. 500!

விளையாட்டுகள் நடத்துவதற்காக என். ஜி. ஓ சங்கத்தைச் சேர்ந்த சென்னை நகர உறுப்பினர்களுக்கு, ஆண்டுதோறும் ரூ. 500 மானியமாகத் தர சென்னை சர்க்கார் அனுமதித்துள்ளனராம்.

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக

செயற் குழு உறுப்பினர்கட்கு

★

" 14-8-55 பகல் 3 மணிக்கு, அருப்புக்கோட்டை எஸ். பி. கே. உயர்நிலைப் பள்ளி வீதியிலுள்ள திரு. பி. வி. எஸ். எம். இரத்தினம் அவர்களுடைய புஷ்ப மாளிகையில், இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். செயற் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

* * *

இராமநாதபுரம் மாவட்டக் கிளைக் கழகத் தோழர்கட்கு

" 14—8—55 அன்று, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அருப்புக் கோட்டைக்கு வருகை தருகிறார்;

" அதுபோது, இராமநாதபுர மாவட்ட தி. மு. கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது;

" எனவே, ஆங்காங்குள்ள கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும் அந்தந்த கழகங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட மாநில மாநாட்டு நிதியை உடனே எனக்கு அனுப்புவதோடு, 14—8—55 அன்று நடைபெறும் நிதியளிப்புக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இல. ம. சௌந்திரபாண்டியன் கேட்டுக்கொள்கிறார்.

சென்னை 3-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

10—8—55 இரவு 8 மணிக்கு, சென்னை 3-வது வட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது கழக வரவு-செலவுகள் சரிபார்க்கப் படும்.

திருக்குறள் வகுப்பு

10—8—55 மாலை 6 மணிக்கு, சென்னை-புரசை, எண் 100, வெள்ளாழத் தெரு, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் கு. அன்பழகன் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

நெல்லை மாவட்டத்தில் அண்ணுதுரை

சுற்றுப்பயணம்

★

தோழர் சி. என். அண்ணுதுரை அவர்கள், நெல்லை மாவட்டத்தில் 16-8-55 முதல் 21-8-55 வரையில் ஆறு நாட்கள் சுற்றுப்பயணம் செய்வார்.

சுற்றுப்பயணத் திட்டத்தை நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி வகுத்துப் பின்னர் விவரமாக அறிவிப்பார்.

மாநில மாநாட்டு நிதி தந்துகூட்டம் அமைத்துக்கொள்ளும் தோழர்கள், தோழர் கே. வி. கே. சாமி அவர்களோடு தொடர்புகொள்ளவும்.

'அறிவகம்' சென்னை 28-7-55 } பொறுப்பாளர், தி. மு. க. தலைமைக் கழகம்

பொதுத் தேர்தலை ஒத்திவைக்கக் கூடாது

காமராசர் கூறுகிறார்

சென்னை, ஆக. 8—

ஏற்கனவே திட்டமிட்டுள்ளபடி, இந்தியாவின் அடுத்த பொதுத் தேர்தலை வருகிற 1957-ம் ஆண்டு துவக்கத்திலேயே நடத்திவிட வேண்டும் என்றும் அதை ஒத்தி வைக்கக் கூடாது என்றும், தன்னைப் பொறுத்தவரையில் ஒத்தி வைப்பதை ஆதரிக்க முடியாதென்றும், சென்னை மாநில முதலமைச்சர் திருகாமராசர் நிருபர்களிடை பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

" மாநில புனரமைப்புக் குழுவின் சிபார்சுகள் குறித்து மத்திய ஆட்சியினர், அதிகத் தாமதமின்றி திட்டமான நடவடிக்கை எடுப்பது சாத்தியமாகவே இருக்கவேண்டும். அக்குழுவின் சிபார்சுகளை யொட்டி, சில மாநிலங்களின் எல்லையை மாற்றியமைப்பதாக இருந்தாலும், அதையும் 1956 செப்டம்பர் மாதத்திற்கு முன் முடித்துவிட வேண்டும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

சூதாட்டத்தை ஒடுக்க நடவடிக்கை

சென்னை, ஆக. 8—

நியூயார்க் பருத்தி விலை, தங்கம் விலை, மோட்டார் எண்கள், வீதி தெருக்களில் சூதாடுதல்—ஆகியவற்றை ஒடுக்கும் போலீஸ் சட்டத்திற்கு திருத்தம் செய்யும் மசோதாவை சட்டசபை இன்று நிறைவேற்றியது.

இச்சூதாட்டங்களை, பரவலான முறையில் சிலர் நடத்துகின்றனரென்றும், இரத்த தீய செயல் மற்ற ஊர்களுக்கும் பரவுகிறதென்றும், இதைத் தடுப்பதற்கு சட்டத்திலுள்ள குறைபாடுகளைப் போக்கவே திருத்த மசோதா கொண்டுவரப்படுகிறதென்றும் அமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

'ஒழுங்குபடுத்த' போலீசுக்கு வசதி!

சென்னை, ஆக. 8—

பூங்காக்களிலும், மைதானம் போன்ற பொது இடங்களிலும் கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்த போலீசாருக்கு அதிகாரமளிக்கும் போலீஸ் சட்ட(திருத்த)மசோதாவை சட்டமாக்க சென்னை சட்டசபை தீர்மானித்தது.

மாறுபட்ட கருத்துக்கள் கொண்ட அரசியல் கட்சிகள் பல இருப்பதால், கூட்டங்கள், ஊர்வலங்களை ஒழுங்குபடுத்த போலீசுக்கு அதிக அதிகாரம் தேவையாக இருக்கிறதென்றும், ஒலிபெருக்கியை ஒழுங்குபடுத்துவதும் பிரச்சினையாகி உள்ளதென்றும் நிதிமந்திரி சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

உறுப்பினர்கள் பலர் திருத்த மசோதாவை எதிர்த்தனர். மசோதாவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற பிரேரபணை மீது 'ஓட்' எடுக்குமாறு கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் வற்புறுத்தினர்; சாதகமாக 46 வாக்குகளும், பாதகமாக 16 வாக்குகளும் கிடைத்தன; 9 பேர் நடுநிலைமை வகித்தனர்; பிரேரபணை நிறைவேறியது.

தற்போது இல்லையாம்!

சென்னை, ஆக. 8—

" சென்னை சர்க்காரின் ஜெஜட் பதிவு பெறாத ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தும் உத்தேசம் தற்போது சர்க்காருக்கு இல்லை," என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை மேல் சபையில் கூறியிருக்கிறார்.

'இரண்டாவது திட்ட காலத்தில் ஊதியத்தை உயர்த்த சர்க்காருக்கு உத்தேசம் உள்ளதா,' என்பதை இரண்டாவது திட்டம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் போது கவனித்துக்கொள்ளலாம் என்றும் கூறியிருக்கிறார்.

'பிரச்சினை' தீர்ந்தது?

ஏற்கனவே சென்னை மேல் (சட்ட) சபை நிறைவேற்றிய பரிசுப் போட்டிகளை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்படுத்தவும் சட்டமியற்ற மக்கள் சபைக்கு அதிகாரமளிக்கும் பிரேரபணையை, சட்டசபையும் கீழ்சபை நிறைவேற்றி விட்டது.

'லைசென்சு' பெற்று நடத்தப்படும் போட்டிகளுக்கு அதிகப்பட்ட பரிசுத் தொகை மாதமொன்றுக்கு ரூ. 1,000; 'லைசென்ஸ்' பெறுவதற்கு ரூ. 100 என நிர்ணயிக்க வேண்டுமென சென்னை சர்க்கார் கூறியிருந்த யோசனையை மத்திய சர்க்கார் அங்கீகரித்திருப்பதாக, சபையில், நிதி அமைச்சர் அறிவித்தார்.

வழி காட்டுகிறதாம்!

சென்னை, ஆக 8—

சமுதாய நல அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்காகக் கிராமத் தலைவர்களுக்குப் பயிற்சிதர சென்னை சர்க்கார் தயாரித்திருந்த திட்டத்தின் பிரதிகளை எல்லா மாநில சர்க்கார்களுக்கும் அனுப்பி வைத்து, ஒவ்வொரு மாநில சர்க்காரும், தங்கள் தங்கள் பிரதேசத்தில் தக்கபடி செயல் புரியவேண்டுமென்று மத்திய சமுதாய நலத் திட்ட இலாகா கேட்டுக் கொண்டுள்ளதெனத் தெரிய வருகிறது.

கிராமவாசிகள் அனைவரும் தாங்களாகவே திட்டம் தயாரித்து, தாங்களே அதனை நிறைவேற்றுவதற்கான மன எழுச்சியையும் பெற்று, தன்னுதவி, தன்னம்பிக்கை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர்கள் உணரவேண்டும் என்பதே சென்னை சர்க்காரின் மேற்படி பயிற்சித் திட்டத்தின் நோக்கமாம்.

தாராளமே தாராளம்!

" மீனவரின் சமூகப் பொருளாதார நிலை உயர்வுக்கென, சர்க்கார், 1953—54ல், ரூ. 7,86,00,000 செலவிட்டனர்," என்று சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

காமராசர் அழைக்கிறார்!

பிரதமர் நேரு, அக்டோபர் திங்களில் சென்னைக்கு வரும் போது, தமிழ் நாட்டின் சில பகுதிகளில் இரண்டு தினங்கள் சுற்றுப் பயணம் செய்யவேண்டுமென சென்னை முதலமைச்சர் கேட்டுக் கொண்டிருக்கிறாராம்.

பாதகமில்லாத நடவடிக்கையாம்!

" கைத்தறிகளை, விசைத் தறிகளாக மாற்ற முயற்சி நடப்பதால், கைத்தறி நெசவாளருக்கு பாதகம் ஏற்படாதா?"—என்று சட்டசபையில் எழுந்த கேள்விக்கு, " இப்போதுள்ள கைத்தறி நெசவாளர் எவ்வகையிலும் பாதிக்கப்படாத முறையில்தான் எந்த நடவடிக்கை ... வார்கள்," என்று விவசாய மந்திரி பக்தவத்சலம் தெரிவித்துள்ளார்.

மொழிப் பயிற்சி பெறாத பட்டதாரி ஆசிரியர்கள்

சென்னை, ஆக. 9—

தமிழ் போன்ற மற்ற மொழிகளில், பட்டம் பெற்ற பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கும்—இதர பயிற்சி பெறாத ஆசிரியர்களைப் போலவே ரூ. 65 சம்பளம் தர சர்க்கார் உத்தரவொன்றைப் பிறப்பித்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.